செ.வெ.எண்:43 நாள்:29.12.2018

# அரியலூர் மாவட்டத்தில் முதலீட்டாளர்களுக்கான கருத்தரங்கில் 55 புதிய தொழில் முதலீட்டாளர்களுக்கு ரூ.79.23 கோடி மதிப்பில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்டத்தில் மாவட்ட தொழில் மையம் மூலம் உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019 முன்னிட்டு முதலீட்டாளர்களுக்கான கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் முன்னிலையில் இன்று (29.12.2018) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் கலந்துகொண்டார்.

**இந்நிகழ்ச்சியில், 55 புதிய தொழில் முதலீட்டார்களுக்கு ரூ.79.23 கோடி மதிப்பில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வழங்கி, மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது :-**

நமது மாவட்டத்தில் மாவட்ட தொழில் மையம் சார்பாக உலக முதலீட்டாளர்கள் மாநாட்டு 2019 முன்னிட்டு முதலீட்டார்களுக்கான சிறப்பு கருத்தரங்கம் நடைபெற்று கொண்டிருக்கிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கனவுத்திட்டமான விசன் 2023 திட்டத்தின் கீழ், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தமிழகத்தை தொழில் மிகை முன்னோடி மாநிலமாக மாற்றும் பொருட்டு உலக முதலீட்டாளர்களை தமிழகத்தில் தொழில் துவங்க ஈர்க்கும் நோக்கத்துடன் தமிழக அரசு உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்த ஆணையிடப்பட்டது.

இதன்படி 2015-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 மற்றும் 10 ஆம் தேதிகளில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையில் நடந்த உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாட்டில் 10,073 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மூலம் ரூ.16,532.67 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

அவ்வாறு ஒப்பந்தம் செய்து கொண்ட தொழில் முனைவோர்களுக்கு வங்கி மூலம் கடனுதவி பெறவும், சம்பந்தப்பட்ட வங்கி மூலமாக சட்ட பூர்வமான அனுமதி பெறவும், தகுதியான மானியம் பெற்றுத்தரவும் அரசு உறுதி வழங்கியது.

அதன்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு சட்ட பூர்வமான அனுமதிகள் விண்ணப்பித்த 30 நாட்களுக்குள் ஒற்றைச்சாளர முறையில் வழங்கப்பட்டது.

அரியலூர் மாவட்டத்தில், தொழில் முனைவோர்களுக்கு உடனடி உரிமங்கள் கிடைக்க வழிவகை செய்யும் பொருட்டு, நமது மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையின் கீழ் ஒருமுனை தீர்வு குழுவானது 09.03.2018 முதல் செயல்பட்டு வருகிறது. இக்குழு மாதம் இருமுறை கூடி நிறுவனங்களுக்கு உரிமம் வழங்குவதிலுள்ள இடர்பாடுகளை களைய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

கடந்த 2017-2019 ஆம் நிதி ஆண்டில் வரை நமது அரியலூர் மாவட்டத்தில் மாவட்ட தொழில் மையத்தின் மூலம் மாநில முதலீட்டு மானியத் திட்டத்தில் 13 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.31.86 இலட்சம் மானியமாகவும், குறைந்த அழுத்த மின் மானியத் திட்டத்தில் 10 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.1.22 இலட்சம் மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், வேலையற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில் 129 பயனாளிகளுக்கு ரூ.45.54 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு, புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தில் 7 பயனாளிகளுக்கு ரூ.28.06 இலட்சம் மானியமாகவும் வழங்குவதற்கு கடன் ஒப்பளிப்பு பெறப்பட்டு, தொழில் துவங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசின் திட்டமான பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில் 143 பயனாளிகளுக்கு ரூ.96.26 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு, தொழில் துவங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், மாசற்ற மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில் நுட்பத்தை பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு தகுதியான இயந்திர தளவாடங்கள் மீதான முதலீட்டின் மதிப்பில் 25 விழுக்காடு அதிகப்பட்டம் ரூ.3 இலட்சம் கூடுதல் முதலீட்டு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, அரியலூர் மாவட்டத்தில் தொழில் வளர்ச்சியை பெருக்கிடவும், மாநிலத்திலேயே தொழில் முனைவோர் வளர்ச்சியில் முதன்மை மாவட்டமாக நமது அரியலூர் மாவட்டம் வளர்ச்சி அடைய நமது மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் அரசு உறுதுணையாக தொழில் முனைவோர்களுக்கு வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல செயல்படும் என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், திட்ட மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) வீ.சகுந்தலா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் எஸ்.இளஞ்சேரன், கிளை மேலாளர் (தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம், திருச்சி) மா.அனிதா, பொருளாளர் (அரியலூர் மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சங்கம்) வி.தனஞ்செயன், சிவம் டெக் (உரியமையாளர்) த.இளம்பரிதி, திட்ட பயனாளி க.அசோக்குமார் மற்றும் அலுவலர்கள், தொழில் முனைவோர்கள் கலந்துகொண்டனர்.

முன்னதாக, இணை இயக்குநர் / பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) மா.சண்முகராஜன் வரவேற்புரையாற்றினார். முடிவில், நுண்ணாய்வாளர் (மாவட்ட தொழில் மையம்) சே.பிரேம்குமார் நன்றியுரையாற்றினார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**